செ.வெ.எண்.15 நாள் 05.09.2017

# பத்திரிக்கைச்செய்தி

## உணவுப் பொருட்களின் தரம் குறித்து "வாட்ஸ்அப்" மூலம் புகார் செய்யலாம் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவிப்பு:

கரூர் மாவட்டத்தில் உள்ள உணவு உற்பத்தியாளர்கள், மொத்த விற்பனையாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள், சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் உணவுப் பொருள் தொடர்புடைய அனைத்து வணிகர்களும், உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணயச் சட்டம் 2006 மற்றும் விதிகள் 2011–ன் கீழ் பதிவு அல்லது உரிமச் சான்றிதழ் பெறுவது கட்டாயம் ஆகும். மேலும், உணவுப் பொருள் வணிகத்திற்காக இத்துறையின் கீழ் ஏற்கனவே பதிவுச் சான்றிதழ் அல்லது உரிமச் சான்றிதழ் பெற்றவர்கள் சான்றிதழின் காலாவதி தேதிக்கு முன்னரே, உரிய கட்டணத்தை அரசுக் கணக்கில் செலுத்தி புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

இதுகுறித்து உணவு வணிகர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களுக்கு மாவட்ட நியமன அலுவலர் அலுவலக தொலைபேசி எண் **04324 – 255347**-ல் தொடர்பு கொண்டு தேவையான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கரூர் மாவட்டத்தில் உள்ள ஹோட்டல்கள், பேக்கரிகள், இறைச்சிக் கடைகள், டீக்கடைகள், பால் வியாபாரிகள், சாலையோர உணவு வியாபாரிகள், மளிகைக் கடைகள், உணவுப் பொருட்களின் மொத்த விற்பனையாளர்கள் மற்றும் உணவுப் பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் போன்றவற்றில் வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் சுகாதாரம் குறித்தான

பொதுமக்களின் புகார்களை தெரிவிக்க ஏதுவாக, தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்களால் **“வாட்ஸ்அப் புகார் சேவை 94440 42322”** என்ற அலைபேசி எண் நடைமுறையில் உள்ளது. எனவே, பொதுமக்கள் உணவின் தரம் அல்லது உணவகங்களின் சுகாதாரம் குறித்து புகார் தெரிவிக்க விரும்பினால், மேலே கூறிய அலைபேசி எண்ணில் வாட்ஸ்அப் மூலம் புகார்களைத் தெரிவிக்கலாம் என கரூர் மாவட்ட ஆட்சியர் திரு. கு.கோவிந்தராஜ், இ.ஆ.ப., அறிவித்துள்ளார்கள்.

**வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**